www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

## Thamil Eelam Liberation Organization

TELO

# சதி முயற்சியில் பிற்போக்குவாதக் கும்பல்

"நாம் வன்முறைமீது காதல் கொண்டவர்களோ அன்றேல் அப்மாதிரியான நோய்களால் ப்புற்ற மனநோயாளிகளோ அல்லர். மாறாக தமிழ் இன விடுதலையை முன் வைத்துப்போராடும் ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாம்" என்ற தீர்க்கதரிசன லைவர் தங்கத்துரையின் கூற்றிலே தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு, தமிழ்ப் பேசும் மக்களை அடிமை டியிலிருந்து விடுவித்து சமூக, பொருளாதார, அரசியல்ரீதியில் சுபீட்சம்மிக்க சுதந்திர சோஷலிச தமிழீழம் அமைக்க னையோ இடர்களையும், சோதனைகளையும் தாங்கி உறுதியுடன் போராடும் தமிழீழ விடுதலை இயக்கத்தை சிதைத்துவிட ர வெறிமிக்க ஆயுதகுழு முனைகின்றது. இதற்கு உறுதுணையாக சில சமுதாய புல்லுருவிகள் செயற்பட்டு வருகின்றனர். மக்கள் மத்தியிலும் சர்வதேச ரீதியிலும் விஷமத்தனமான பிரச்சாரத்தில் ஈடுபடுவதன்மூலம் தமிழீழ விடுதலைப் த்தோர் பாதிப்பை ஏற்படுத்த முனைகின்றனர்.

இந்த புல்லுருவிகள் யார் என்பதையும் அவர்கள் இவ்வாறு கொக்கரிப்பதற்குரிய காரணம் என்ன என்பதையும் முன் வைக்கின்றோம். இப்புல்லுருவிகளின் எந்த நடவடிக்கையும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் விடுதலைப் பாதை வ்வித சிறுபாதிப்பும் ஏற்படுத்தமுடியாது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

சமீபத்தில் அதிகார வெறிபிடித்த தனிநபர் ஆயுதக்குழுவின் ஆசைவார்த்தைக்குப் பலியான எமது முக்கிய இயக்கத் கள் இரமேஷ், சுதன் தமது தனித்துவத் தன்மையை இழந்து ஒப்பற்ற தலைவர் தங்கத்துரையினால் 12 வருட காலமாக வளர்க்கப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தை தனிநபர் ஆயுதக்குழுவுக்கு அடகுவைக்க முனைந்தனர்.

இதன் செயற் திட்டமாக தற்போது இயக்கத்தை வழிநடத்திவரும் தோழர் ஸ்ரீ சபாரத்தினத்தை கடத்திச்சென்று டப்பதற்கு திட்டம் தீட்டி இருந்தனர். இச்செயலை நிறைவேற்றுவதற்கு ஒரு கைத்துப்பாக்கியும் குளோரபோம் அடங்கிய ாத்தலும் இருபத்து நான்கு துப்பாக்கி ரவைகளும் தனிநபர் ஆயுதக்குழுவினால் ஒப்படைக்கப்பட்டன.

குறித்த திகதியில் திட்டம் நிறைவேற்றுவதாக தீர்மானிக்கப்பட்டது. குறித்த திகதியில் திட்டத்தை நிறைவேற்ற மல் போகவே இது சாத்தியமாகாவிடின் இயக்கத்தின் முக்கிய நான்கு தோழர்களை கடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது த் திட்டங்களை எல்லாம் எமது உளவுப் பிரிவு தகுந்த நேரத்தில் கண்டுபிடித்து தனிநபர் குழுவினால் வழங்கப்பட்ட களுடன் எமது இயக்கத் தோழர்கள் சுதன், இரமேஷ் கைது செய்யப்பட்டார்கள். தனிநபர் ஆயுதக்குழுவுக்கு துணை தை பின்பு தோழர்கள் சுதன், இரமேஷ் ஒப்புக்கொண்டுள்ளனர்.

எமது இயக்கத்தின் இந்த சூழ்நிலையை பயன்படுத்தி சில ஊடுருவல்வாதிகள் இயக்கத்தை சிதைக்கும் வேலையில் டுப்பது தமிழ் பேசும் மக்களை முட்டாள்தனமானவர்கள் என்ற சிந்தனையினால்போலும். இப்புல்லுருவிகள், இளம் தல் தமிழீழ விடுதலைக்கென்றே தன்னுடைய சிந்தனையையும் செயலையும் செலவிட்டுக்கொண்டு இருப்பவரும், தியாகச் கள் தங்கத்துரை, குட்டிமணியால் உருவாக்கப்பட்ட போர்வாளும், சிங்கள அரசை எதிர்த்து கொடுமைகளுக்குட்பட்டு ண்டுகாலம் சிறைச்சட்டங்களில் புடமிடப்பட்டவரும், ஸ்ரீலங்கா பாசிஸ நீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனை விதிக்கப் மான தோழர் ஸ்ரீ சபாரத்தினம் அவர்களைப்பார்த்து கொச்சைத்தனமாக விமர்சனரீதிக்கு அப்பாற்பட்டு பிரச்சாரம்செய்து றார்கள். இவற்றுக்கெல்லாம் இப்புல்லுருவிகள் பதில் சொல்லவேண்டிய காலத்தை தமிழ்பேசும் மக்கள் ஏற்படுத்துவார் று நம்புகின்றோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

...ரிக்க ஏகாதிபத்திய அரசிற்கு இலங்கைத் தீவை அடகு வைக்கும் தரகு முதலாளித்துவ சோவனிச அரசாங்கத்திற்கு எதிராக ...த மக்கள் போராட்டத்தை நடத்துவதற்கு சகல முன்னெடுப்புக்களையும் செய்துவரும் தமிழீழ விடுதலை இயக்கத்தை ...கி C. I. A. என்று சிறுமதியாளர் ஓலமிடுவது மிகச் சிறந்த நகைச்சுவையாகும். இதை மக்கள் நம்புவார்கள் என்று ...மது மக்களைப் பற்றிய அவர்களுடைய கணிப்பீட்டைக் காட்டுகிறது.

www.tamilarangam.net

...க்களின் விடுதலையை மனதில் கொண்டு, முற்போக்கு தோழமை அமைப்புக்களான EPRLF, ...ROS போன்ற அமைப்புக்களுடனான கூட்டமைப்பை இயக்கம் ஏற்படுத்தியுள்ளது. அந்த ...அமைப்புக்கள் CIA கைக் கூலிகளுடனா கூட்டுச் சேர்ந்துள்ளார்கள்?

புதிய நிர்வாக அமைப்பு ஏற்படுவதை செயலதிபர் தட்டிக்கழித்து வந்துள்ளதாக ஓர் குற்றச்சாட்டை சொல்கிறார்கள். ...ழர் சுதன் அவர்களால் புதிய நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதும் புதிய ...வாக அமைப்புமுறையை வடிவமைக்கும் பொறுப்பு தற்போது இக்குற்றத்தை எழுப்புபவரிடமே ஒப்படைக்கப்பட்டு இருந்ததும் ...வர்களாலேயே மறைக்கமுடியாத உண்மையாகும். சதி முயற்சி நடத்தப்பட இருந்த திகதிக்கு சில தினங்கள்முன்பு கூட்டப் ...ட உயர்மட்டக்குழுக் கூட்டத்தின்போது செயலதிபர் கருத்து வெளியிட முன்பே சுதன், இரமேஷ் கூட்டத்தைவிட்டு வெளி...றியமையும் எத்தனையோதடவை கூட்டம் கூட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டபோதும் அவர்கள் அதை புறக்கணித்தமை ...ய நிர்வாக அமைப்பு ஏற்படுவதையோ அமைப்பில் ஒரு பொது உடன்பாட்டிற்கு வருவதையோ அவர்கள் கருத்தில் கொண்டு ...க்கவில்லை என்பதை புலப்படுத்துகின்றது.

இக்காலகட்டத்திற்கு முன்பே அவர்கள் தனிநபர் ஆயுதக்குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி முடித்தனர் என்பதை ...ம் ஆதாரங்களுடன் அறிந்துள்ளோம். ஆகவே அவர்கள் பொது உடன்பாட்டுக்கு வருவதை குழப்பிவிடுவதையே திட்டமிட்டுச் ...யற்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் தனிநபர் விடுதலை இயக்கமாக எப்பொழுதும் இருந்ததில்லை ...னிமேலும் இருக்கப்போவதில்லை; தமது கோரிக்கைகள் நியாயமான கோரிக்கையாக இருக்குமே ...னால் தலைமை தவறான வழியில் செல்வதாக கருதியிருந்தால் அமைப்பில் அக்கோரிக்கைகளை ...ம்பலமாக்கி ஆதரவு திரட்டுவதன்மூலம் தலைமையை தூக்கி எறிந்திருக்கலாம். ஆனால் இவர்கள ...மர்சன பாரம்பரியத்திற்கு அப்பாற்பட்டு அதிகார வெறிபிடித்த ஆயுதக்குழுவுக்கு எமது புரட்சிகர ...யக்கத்தை தாரை வார்க்கமுற்பட்டது எந்த வகையில் நியாயமானது ?

மேலும் தோழர்கள் அமைப்பில் முக்கிய பொறுப்புகளை வகித்துவந்ததும் அவர்களின் நிர்வாகத்திலேயே இவை ...ங்கிவந்ததும் இவர்களின் குற்றச்சாட்டுக்களை மறுத்துரைக்கின்றன. தனிமனித தலைவர் சர்வாதிகாரி, C. I. A-இன் ...ரகுப்தன் இவை எல்லாம் விமர்சன பாரம்பரியத்திற்கு புறம்பாக எவ்வித சிறு ஆதாரமற்ற நிலையில் மிகவும் கொச்சைத்தன ...க தமிழ்ழ விடுதலை இயக்கச் செயலதிபரை விமர்சிக்கும் வார்த்தைகளாகும்.

... சமுதாயமே தியாகிக்கும் தெரு நாய்க்கும் பேதம் புரியாதா? ...ன்னைக் கொல்லுவதற்கு வந்தவர்களைக் கூட மன்னித்து விடுவோம் என்ற அம்மாமனிதரைப் ...ற்றி இத்தெரு நாய்களுக்கு நாம் பதிலளிக்கப்போவதில்லை. தமிழ் பேசும் மக்களே துரோகிகளைத் ...க்கி வீசுங்கள்! துரோகிகளே தூர விலகுங்கள்!

இயக்கத்திற்கெதிரான துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும்கூட தோழர்கள் சுதன், இரமேஷ் முன்னர் இயக்கத் ...காக கடுமையாக உழைத்ததை நாம் மறுக்கவுமில்லை, மறக்கவுமில்லை.

இயக்கத்தில் இத்தோழர்கள் முக்கிய பொறுப்பு வகித்தபடியால் அவர்களோடு இராணுவ இரகசியங்கள் பின்னிப் ...ணைந்துள்ளது எனவே எமது புரட்சிகர இயக்கத்தின் நன்மை கருதியும் எமது தோழர்களது நன்மை கருதியும் தோழர்களை ...ந்துகாலம் தடுத்துவைக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். மிகவும் நல்லமுறையில் தோழர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

போராட்ட ஆரம்ப காலகட்டத்தில் இவர்கள் விடுவிக்கப்படுவார்களென நாம் உறுதி ...றுகின்றோம்.

நாம் மக்களை நம்பியவர்களே தவிர ஆயுதங்களை நம்பியவர்களல்ல. இயக்கத்தின் ...விடுதலைப் பாதைக்குத் தடைபோடும் அனைத்து பிற்போக்குச் சக்திகளையும் உடைத்தெறிய நாம் ...ின்நிற்க மாட்டோம். இப்பிற்போக்கு சக்திகளுக்கு நாம் பகிரங்க எச்சரிக்கை விடுக்கின்றோம்.

"என்றும் எமது தலைவன் தங்கத்துரை
கொள்கைக்குன்றம் குட்டிமணி"

அரசியற் பிரிவு,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

---

இப்பிரசுரம் பிரச்சார வெளியீட்டுப் பிரிவினரால் 27—06—1984 அன்று வெளியிடப்பட்டது.